www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# முதல் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

C

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி | பகுதி - அ | மதிப்பெண்கள் : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 x 1 = 14

1. மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம் - கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
2. பாயிரம் இல்லது ________ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
3. உலகச் சிட்டுக்குருவி நாள்
   அ) ஜனவரி 20 ஆ) மார்ச் 20 இ) மே 20 ஈ) ஜூலை 20
4. தவறான இணையைத் தேர்வு செய்க.
   அ) மொழி + ஆளுமை = உயிர் + உயிர் ஆ) கடல் + அலை - உயிர் + மெய்
   இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஈ) மண்+ வளம் - மெய் + மெய்
5. மண்ணுக்கு வளம் சேர்ப்பன
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
6. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
   அ) மதிப்புக் கூட்டுப் பொருட்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
   ii) அ-மட்டும் சரி ii) ஆ-மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ-தவறு ஆ-சரி
7. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
8. துன்பப் படுபவர் ________.
   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
9. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
10. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
    அ) காய்முன் நேர் ஆ) காய்முன் நிரை இ) கனிமுன் நிரை ஈ) மா முன் நேர்
11. வாடிவாசல் என்னும் குறும் புதினத்தின் ஆசிரியர்
    அ) ஜெயமோகன் அ) சி.சு.செல்லப்பா இ) பாரதியார் ஈ) சுரதா
12. திருக்குறளின் சிறப்பினை விளக்கப் புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல்
    அ) குறடு ஆ) மீள்கோணம் இ) வெயிலும் நிழலும் ஈ) திருவள்ளுவமாலை
13. பாரதி இந்தியா இதழை ________ வண்ணத்தாளில் வெளியிட்டார்.
    அ) மஞ்சள் ஆ) வெள்ளை இ) சிவப்பு ஈ) பச்சை
14. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
    அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
    இ) தலைமை துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக: 3x2=6

15. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
17. காவடிச்சிந்து என்பது யாது?
18. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக: 2x2=4

19. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
20. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு தருக.
21. பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

### பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக: 7x2=14

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக :
    அ) புலனறிவு ஆ) திரைப்படம்
23. கலைச்சொல் அறிவோம் : அ) Document ஆ) Backwater
24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) ஈன்ற ஆ) முனிவிலர்
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    வலி, வளி, வழி
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க :
    கால்நடை
27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்
28. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
    பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி.
30. வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி வினைமுற்று தொடர் அமைக்க - வா

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைத ருக: 2x4=8

31. "ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
    அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
33. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
34. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

Scanned with CamScanner

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைத ருக: 2x4=8

35. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் - குறிப்பு வரைக.

36. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

37. என்னுயிர் தமிழ்மொழி என்பேன் - என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

38. "மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்.

பிரிவு - 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடைதருக: 3x4=12

39. தமிழாக்கம் தருக :

அ) The pen is mightier than the sword.

ஆ) Knowledge rules the world.

இ) A picture is worth a thousand words.

ஈ) Work while you work and play while you play.

39. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா :

பத்தியினைப் படித்து வினாக்களுக்கான விடையளிக்கவும் :

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகேயுள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர், இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம் கொண்டு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும் போது சித்தமருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' என்று அழைக்கப்பட்டார்.

*வினாக்களுக்கு விடையளி :*

அ) தமிழிசை இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

ஆ) ஆபிரகாம் பண்டிதர் பிறந்த ஊர் எது?

இ) பண்டிதர் பயின்ற துறைகள் என்று யாவை?

ஈ) ஆபிரகாம் பண்டிதரை மக்கள் எவ்வாறு அழைத்தனர்?

40. அ) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***

***(அல்லது)***

ஆ) சொற்பொருள் பின்வரும் நிலையணியை சான்றுடன் விளக்குக.

41. பாடலின் மையக் கருத்து, ஏற்புடைய மூன்று நயங்களைப் பாராட்டுக :

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?

Scanned with CamScanner


www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர் - பாரதியார்

42. மயில் அல்லது தாய் என்னும் தலைப்பில் பத்து வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதுக.

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக மாற்றுக :




## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக : 3 x 6 = 18

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

*(அல்லது)*

ஆ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் முப்பால் வழி விளக்குக.

45. அ) தாம் வாழ்ந்த காலத்தில் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

*(அல்லது)*

ஆ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

46. அ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

*(அல்லது)*

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

## பகுதி - V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக :

அ) அம்ம வாழி - எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.

ஆ) பொருட்டு - என முடியும் குறளை எழுதுக.

******

Scanned with CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com